www.tamilarangam.net

தமிழ் ஈழ தேச பிதா
தங்கத்துரை அவர்களால்
வெளியிடப்பெற்ற



வரலாற்றுச் சிறப்புமிக்க

# விடுதலைப் பிரகடனம்

வெளியிடு :

*பிரச்சார வெளியீட்டுப் பிரிவு.*

*தமிழ் ஈழ விடுதலை இயக்கம்.*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ் ஈழ விடுதலை இயக்கம்

TELO

27, ORPHEUS TOWER
6, DESMOND STREET
LONDON SE14 6

நாம் வன்முறை மீது காதல் கொண்ட மனநோயாளிகள் அல்லர்.

—தமிழ் ஈழ தேசபிதா தங்கத்துரை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முதலாம் பதிப்பு
05—ஏப்ரல்—1985.

**வெளியீடு :**

பிரச்சார வெளியீட்டுப் பிரிவு
தமிழ் ஈழ விடுதலை இயக்கம்.

# முன்னுரை

தமிழ் ஈழ விடுதலையை இலட்சியமாகக் கொண்டு தமிழீழ மக்களிடையே எழுந்த முதல் இயக்கம் தமிழ் ஈழ விடுதலை இயக்கமாகும்.

தமிழ் ஈழ தேசத்தின் தொண்டைமானாறு என்னும் ஊரின் உழைப்பாளிகள் குடும்பம் ஒன்றிலே தோன்றியவரான தங்கத்துரை அவர்களால் 1969 ஆம் ஆண்டு எமது இயக்கம் ஸ்தாபிக்கப்பட்டது.

1969 ஆம் ஆண்டு சுமார் இருபத்தியொரு வயது நிரம்பியவராக இருந்த தமிழ் ஈழ தேசபிதா தங்கத்துரை அவர்கள் தமிழ் ஈழ விடுதலையை வென்றெடுப்பதற்கான மார்க்கம் மக்கள் ஆயுதப் போராட்டத்தை உள்ளடக்கியதே என்று மிகுந்த தீர்க்க தரிசனத்துடன் உறுதிபடத் தெரிவித்திருந்ததை ஏனைய பலரும் வரலாறு கற்பிக்கும் பாடமாக இன்று ஏற்றுக் கொள்வதைக் காண முடிகிறது.


தமிழ் ஈழ தேசபிதா தங்கத்துரை அவர்களிடம் சிந்தனைத் திறன் நிரம்பியிருந்தது. எதற்கெடுத்தாலும் தான், தான் என்று தம்பட்டமடிக்கும் குணக்கேடு இவரிடம் காணக்கிடைக்காத தொன்று. பரந்த மனப்பான்மை உடையவராக இவர் செயற்பட்ட விதம் கண்டு,'தங்கண்ணா' என்று பாசத்துடன் இவரை அழைக்கத் தொடங்கினர்கள். தமிழ் ஈழ மக்களின் விடுதலை என்கிற பொது இலட்சியத்தை மிகுந்த உளத் தூய்மையுடன் கருத்திற் கொண்டு, தனி நபர் வெறிகள் எதுவும் தம்முள் ஏற்படா வண்ணம் தமிழ் ஈழ தேசபிதா நடந்து கொண்ட முறை இன்றைய பல்வேறு விடுதலை அமைப்புக் களில் உள்ளோர்க்கும் பாடங்களாக அமைய வேண்டும். கண்மூடித்தனமாகவோ, வெறித்தனமாகவோ எந்தச் சித்தாந்தத் திற்கும் தன்னை அவர் அடிமையாக்கிக் கொண்டதில்லை.

சிந்தனைச் சுதந்திரத்துடன் விளங்கிய காரணத்தால் தமிழீழ மக்களுக்கு ஏற்புடையதான வழி வகைகளுடன் தமிழீழ மக்கள் விடுதலை பற்றிய திட்டங்களை இவர் வகுத்துக் கொண்டார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தளபதி குட்டிமணி

தேசபிதா தங்கத்துரையுடன் தோளோடு தோள் நின்று மிகச் சிறந்த செயற்பாட்டு சக்தியாக விளங்கியவர் குட்டிமணி ஆவார். தமிழீழத்தின்வல்வெட்டித்துறை என்னும் இடத்தைச் சேர்ந்த உழைப்பாளிகள் வர்க்கத்து வார்ப்பாகிய குட்டிமணியின் இயற்பெயர் செ. யோகச்சந்திரன் என்பதாகும். தங்கத்துரை அவர்கள் தமிழ் ஈழ விடுதலை



இயக்கத்தின் தலைவராக இருந்து இயக்கத்தை வழிநடத்திய வேளை இயக்கத்தின் நெடுங்காலத் தளபதியாக குட்டிமணி அவர்கள் செயற்பட்ட காரணத்தால் இன்னும் தளபதி என்னும் சிறப்புப் பெயர் அவருக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

தமிழ் ஈழ தேசபிதா தங்கத்துரையும், தளபதி குட்டிமணியும், முன்னணிப் போராட்ட வீரர் தேவனும் 1981ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5ந் தேதி தமிழின விரோத சதிகாரன் ஒருவனால் காட்டிக் கொடுக்கப்பட்டு பருத்தித்துறை மணற்காடு கடற்கரையில் வைத்து ஸ்ரீலங்கா ஆயுத படையினரால் கைது செய்யப் பட்டனர்.

சர்வதேச நீதி ஸ்தாபனங்களினுல் மிகக் கொடுமையான தென நிந்திக்கப்பட்டு வருகின்ற ஸ்ரீலங்கா அரசின் பயங்கரவாத தடைச்சட்டம் முதன் முதலாக தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தினருக்கு எதிராகக் கடுமையாகப் பிர யோகிக்கப்பட்டது.

பருத்தித்துறை போலிஸ் நிலையத்திலிருந்து தொடங்கி ஆனையிறவு, பலாலி, பனாகொடை போன்ற சிங்கள இராணுவ முகாம்களிலும் இறுதியாக வெலிக்கடை மனித வதைச் சிறைச் சாலையிலும் 841 நாட்கள் பட்டினியுடன் கூடிய தனிமைச் சிறைகளிலே — இவர்கள் வாட்டி வதைக்கப்பட்டார்கள்.

கைது செய்யப்பட்ட பிறகும் கூட போராடுங்குணமாகிய தங்கள் சிறப்பான வர்க்க குணாம்சத்தை தேசபிதா தங்கத் துரையோ, தளபதி குட்டிமணியோ ஏனைய தமிழ் ஈழ விடுதலை இயக்கப் போராளிகளோ வெளிப்படுத்தத் தவறவில்லை.

தமிழ் ஈழ விடுதலை இயக்க வீரர்களுக்கு எதிராக பற்பல வழக்குகளைச் ஸ்ரீலங்கா அரசினர் தொடுத்தனர். எமது இயக்கத்தினர்களுக்கெதிராக பல வழக்குகள் தொடுக்கப்பட்ட போதும், இரண்டே இரண்டு வழக்குகளில் மட்டும் சில காரணங்களுக்காக விசாரணையில் பங்கு பற்றிக் கொண்டனர். அவ் வழக்குகளில் தமது தனிப்பட்ட விடுதலையை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1981 - ஏப்ரல் - 05 இல் கைது செய்யப்பட்ட தேசபிதா தங்கத்துரை, தளபதி குட்டிமணி, போராளி தேவன் ஆகியோர் ஏப்ரல் 06 மாலை பலத்த பாதுகாப்புடன் பலாலி விமான நிலையத்திலிருந்து கொழும்பு கொண்டு செல்லப்பட்டபோது எடுக்கப் பட்டது.



எள்ளளவும் யாசித்து நில்லாமல் தமிழீழத்தின் விடுதலை ஒன்றையே முக்கியமாகக் கொண்டு முரசறைந்து நின்றனர்.

அவற்றுள் முதலாவது வழக்குசிவனேசன் என்ற ஸ்ரீலங்கா போலிஸ் கான்ஸ்டபிளைக் கொலை செய்ததாக தளபதி குட்டிமணி, முன்னணிப் போராட்ட வீரர் ஜெகன் முதலானோருக்கும் எதிராகத் தொடுக்கப் பட்டிருந்தது. இவ் வழக்கின் இறுதியில் இவர்களுக்கு மரணதண்டனை என்று ஸ்ரீலங்காவின் பாசிச நீதி மன்றம் தீர்ப்பளித்தபோது தளபதி குட்டிமணியும், முன்னணிப் போராட்ட வீரர் ஜெகனும் ஆற்றிய இறுதி உரைகள் இந்நூலில் இடம் பெறுகின்றன.

இரண்டாவது வழக்காகிய நீர்வேலி வங்கிக் கொள்ளை வழக்கு விசாரணையில் தேசபிதா தங்கத்துரை, தளபதி குட்டிமணி முதலான நமது இயக்க வீரர்கள் அனைவரும் கலந்து கொண்ட விதம் சாதாரண நீதி மன்ற விசாரணைப் பங்கேற்பு நடை முறைகளில் இருந்து எவ்வளவு தூரம் மாறுபட்டு தமிழீழ விடுதலை ஒன்றையே பிரதானமாகக் கொண்டிருந்ததென்பதை வழக்கு நடை பெற்ற காலங்களில் தமிழீழ மக்கள் நன்கு அவதானித்துக் கொண்டார்கள்.

தமிழீழ மக்களின் எண்ணங்களை எல்லாம் ஒன்றுகப் பிரதிபலித்து, தமிழ் ஈழ தேசபிதா தங்கத்துரை அவர்கள் **24—02—83** அன்று தமிழ் ஈழத்து மக்கள் சார்பில் ஸ்ரீலங்கா பாஸிஸ நீதிமன்றத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்கவிடுதலைப் பிரகடனத்தை வெளியிட்டார். அந்த விடுதலைப் பிரகடனத்தை தாங்கி வருவதால் இந்நூல் மேலும் சிறப்புப் பெறுகிறது.

இந்த வழக்கில் பங்கு பற்றியமைக்குப் பின்னுல் வேறு பல வழக்குகளுக்கான குற்றப் பத்திரங்கள் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தவர்களுக்குக் கையளிக்கப்பட்ட போதும், அவ் வழக்குகள் எதிலுமே, யூலைத் திங்கள் வெலிக்கடைச் சிறையிலே படுகொலை செய்யப்பட்ட நாளதுவரை எமது தேசபிதாவின் உரையின் பிரகாரம் பங்கேற்றுக் கொள்ள வில்லை என்பதை இங்கே சுட்டிக் காட்ட வேண்டியிருக்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தலைவர் ஸ்ரீ சபாரெத்தினம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டமைக்காக 1973 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10ம் திகதி ஸ்ரீலங்கா அரசினால் கைது செய்யப்பட்டு 1975 யூலை மாதம் வரை ஸ்ரீலங்கா சிறைகளிலே வைக்கப்பட்டிருந்தார்.

இச்சிறை வாசத்தின் நடுவில் தளபதி குட்டிமணி அவர்களும் கைது செய்யப்பட்டு ஒன்றாகச் சிறைவாசம் அனுபவிக்க வேண்டியிருந்ததால் தளபதி குட்டிமணி அவர்களுக்கும், இவருக்கும் நெருக்கமான தோழமை ஏற்பட்டது.

1975 யூலையில் விடுதலை செய்யப்பட்டு ஒரு மாத கால இடைவெளியின் பின்னர் மீண்டும் கைதாகி ஒரு வருடத்திற்கும் மேலாக மீண்டும் சிங்களச் சிறைகளில் வாட நேர்ந்தது.

தேசபிதா தங்கத்துரை, தளபதி குட்டிமணி, முன்னணிப் போராளிகள் தேவன், நடேசுதாஸன், சிவபாதம் ஆகியோருடன், கைது செய்யப்படாத நிலையிலேயே குற்றவாளியாகக் காணப்பட்டு தலைவர் ஸ்ரீ சபாரெத்தினத்திற்கும் ஆயுள் தண்டனை விதித்து வைக்கப்பட்டுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.



தலைவர் ஸ்ரீ சபாரெத்தினம்.



தமிழ் ஈழ விடுதலை அமைப்புக்கள் ஒன்றிணைய வேண்டுமென்ற தேசபிதாவின் கொள்கையை முன்வைத்து தமிழ் ஈழ விடுதலை அமைப்புகளின் இணைவிற்கு பெரும் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்.

எப்பொழுதும் தமிழீழ மக்களின் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு, தமிழ் ஈழ விடுதலை இயக்கமானது ஸ்ரீலங்கா ஆக்கிரமிப்பு அரச படைகளுக்கெதிராகப் பாரிய தாக்குதல்களை நிகழ்த்திக் கொண்டிருக்கிறது.

நீர்வேலி வங்கிக் கொள்ளை வழக்கு விசாரணைகளில் நமது இயக்கத்தவர் சார்பில் ஆஜராகிய பிரதான சட்டத்தரணி திரு. சத்தியேந்திரா அவர்கள் நிகழ்த்திய உரையின் ஒரு பகுதியும் இதில் இடம் பெறுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 1983 பெப்ரவரி 24—ம் திகதி சிறிலங்கா பாசிச நீதி மன்றத்தில் தமிழீழ தேசபிதா தங்கத்துரை அவர்கள் வெளியிட்ட விடுதலைப் பிரகடனம்.

கனம் நீதிபதி அவர்களே!

**ஸ்ரீலங்காவின் நீதிமன்றம் எதற்கும் எம்மை விசாரிப்பதற்கான அதிகாரம், உரிமை கிடையாதென்ற எமது ஆரம்ப ஆட்சேபனையையும் மீறி ஸ்ரீலங்கா அரசின் நீதி நிர்வாகப் பிரிவின் ஓர் அங்கமாகிய இம்மன்றம் எம்மீது இவர்களால் சோடிக்கப்பட்ட இவ்வழக்கை கடந்த நான்கு மாதங்களாய் விசாரித்து வந்துள்ளது.**

நாமும் இரண்டாம் கட்டமாகிய பகிஸ்கரிப்பு என்பதனை மேற்கொள்ளாது, இம்மன்றத்தின் விசாரணைக்கு சமூகமளித்தோம்.

எமது குற்றமற்ற தன்மை, மற்றும் எமக்கு இழைக்கப்பட்ட சித்திரவதைகளை எமது சட்டத்தரணி, எமது சாட்சிகளின் மூலமாயும், சித்திரவதைப் புகழ் ஸ்ரீலங்கா அரசு பொலிஸ் அதிகாரிகளை தமது குறுக்கு விசாரணைகளின் போது அடிக்க வைத்த குத்துக்கரணங்களாலும், மற்றும் சட்ட வாதங்களின் மூலமாயும் மிக வெற்றிகரமாய் நிரூபித்த விட்டமை கண்கூடு.

வெள்ளையர் இந்நாட்டை சிங்களப் பிரபுகளிடம், தமிழ் மக்கள் தலைவிதியையும் சேர்த்து ஒப்படைத்து செல்கையிலே தமிழ் மக்கள் விடுதலையைக் கோரிவிடவில்லை. மாறாக, சிங்களப் பிரபுக்கள் எம்மை இரண்டாம் தர பிரஜையாக்க மாட்டார்களோ என்ற சந்தேகம் எழுந்தது இயல்பே.

இதன் விளைவே தமிழ் தலைவர்கள் தம் இனம் நசிந்து விடக் கூடாது என்ற தீர்க்க தரிசனத்துடன் கூடுதல் பிரதிநிதித்துவம் போன்ற விடயங்களை அப்போது வலியுறுத்தினர். அவர்கள் சந்தேகங்கள் தவறான அடிப்படையில் ஒன்றும் எழுந்துவிட வில்லை, என்பதை வலியுறுத்தும் வகையிலேயே அமைந்தது மலையகத் தமிழரின் வாக்குரிமைப் பறிப்பு.



அடுத்து வந்த கால் நூற்றாண்டு காலமாக தமிழ் மக்களது உரிமைகள் மட்டுமல்லாது மரபு வழிப்பிரதேசங்களும், தமிழ் மக்கள் தலைவர்களினது கடும் எதிர்ப்புகளையும்மீறி திட்டமிட்ட முறையில் சிங்கள அதிகார அமைப்பு முறையினால் பறிபட்டு வந்தமை ஒன்றுமே நடந்து விடாத விடயங்கள் அல்ல.

இக்கால கட்டத்தில் லட்சக்கணக்கான மக்களும், தமிழ்த் தலைவர்களும் தமது எதிர்ப்புக்களை அகிம்சை முறையிலே மிக நாகரீகமாகவும், உறுதியுடனும் சத்தியாக்கிரக வழிகளிலும் காட்டினர். ஆனால் நடந்தது என்ன?

**தீ நாக்குள் தீண்டின!**

நிராயுதபாணிகளான தலைவர்கள் மீது முதன் முதலில் காலிமுகத்திடலில் ஆயுதக் காடையர்கள் மூலம் வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது. பின்னர் யாழ் செயலகத்தின் முன்பாக அப்பாவி மக்கள், தலைவர்கள் அடங்கிய சத்தியாக்கிரகிகள் மீது ஸ்ரீலங்காவின் ஏவல் இராணுவம் தனது காட்டுமிராண்டித்தனத்தை பிரயோகித்தமை நாகரீக உலகு தலை நிமிர்ந்து ஏற்றுக் கொள்ளக் கூடிய செய்கையல்ல.

இப்படி ஒன்றூ இரண்டா? கடந்த முப்பத்தைந்து வருட காலமாக இத்தீவின் வாழ் தமிழ் மக்கள் மீது பிரயோகிக்கப் பட்ட திட்டமிட்ட காடைத்தனங்கள், வன்முறைகள் எண்ணிக்கையில் அடங்கிவிடக் கூடியவையா? தமிழ் மக்களின் ஜீவனோபாய உடமைகள் மட்டுமா அவ்வப்போது சூறையாடப்பட்டன. எத்தனை தமிழ்ப் பெண்களின் கற்பு அவர்கள் குடும்பத்தினர் முன்னிலையிலேயே பறிக்கப்பட்டது.

காலங்காலமாய் எங்களால் பேணிப் போற்றப்பட்டு வந்த கலைப்பொக்கிஷங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. இவற்றிற்கெல்லாம் சில லட்சம் ரூபாய்களால் ஈடுகட்டி விடலாம் என்பது எத்தகைய கேலிக்கிடம்.

இத்தனை இம்சைகளையும் கண்ட தமிழ் மக்கள் மனச்சோர்வுற்றார்களா, இல்லை. தமது போராட்டத்தில் இருந்து இம்மியேனும் பின் வாங்கினார்களா எனினும் கிடையாது. இவ் இம்சைகள் யாவும் அவர்களின் இலட்சியத்திற்கு உரம் போட்டவையாகவே அமைந்தன. சமயம் கிடைச் நம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போதெல்லாம் தமிழ் மக்கள் அதை ஸ்ரீலங்கா அரசிற்கு நன்கு உணர்த்தியே வந்தனர். சமீபகாலமாக ஸ்ரீலங்கா அரசால் நடத்தி முடிக்கப்பட்ட தேர்தல்களில் அதை மிக உறுதியாய் நிருபித்தனர்.

இனவெறியைத் தூண்டியும் இனப்படுகொலையை நடத்துவதன் மூலமாயும் அரசியல் கூதல் காய்ந்து கொண்டிருக்கும் ஓர் அரசு, நேர்மையான போராளிகளான எம்மைப் பார்த்து பயங்கரவாதிகள் என்பதிலும் வேடிக்கை வேறு என்ன இருக்க முடியும்? பாராளுமன்ற ஜனநாயகத்தின் அரை நூற்றாண்டு பூர்த்தியைக் கொண்டாடிய அதே வேளையில் இன்னொரு பக்கத்தில் தமிழ்த் தலைவர்களை. அதே பாராளுமன்ற உறுப்பினர்களை அர்த்தசாமத்தில் இராணுவ வேட்டையாடிப் பிடிப்பதும் அவர்களை வீட்டுடன் வைத்தே தீயிட்டு கொளுத்த முயன்றமையும் உங்கள் ஜனநாயகப் பாரம்பரியத்தில் எத்தனையாவது அத்தியாயத்தில் சேர்த்துக்கொள்ளப் போகின்றன.

### எமது பூமியை எம்மிடம் தாரும்!

பயங்கரவாதம், கொள்ளை என்கிறீர்கள். ஸ்ரீலங்கா அரசின் ஏவல்படைகளினால் நடத்தி முடிக்கப்பட்ட பயங்கரவாதங்களுக்கு இணையான பயங்கர வாதங்கள் இத்தீவில் எக்காலத்திலும் நடக்க முடியா. அதே ஏவல் படைகள் சூறையாடிய தமிழ் மக்களின் சொத்துக்கள் அவர்களிடம் இருந்து பறிக்கப் பட்டமையும் இத்தீவு மக்கள் ஒன்றும் அறியாத இரகசியங்கள் அல்ல. போதாக் குறைக்கு அவ்வப்போது உங்களது அரசியல் ஏஜெண்டுகள் அரசியல் என்ற பெயரில் துப்பாக்கிகளை சுழற்றித் திரிந்தமை மிக அண்மைக்கால வரலாறு.

இத்துணை கேவலங்களையும் நடத்தி முடித்திருக்கும் நீங்கள் எம்மைப் பயங்கரவாதிகளாய் சித்தரிக்க கச்சைகட்டியிருப்பதைவிட இந்நூற்றாண்டின் சிறந்த நகைச்சுவை வேறென்ன இருக்க முடியும்.

பிரிவினை கோருகின்றோம். நாட்டைத் துண்டாட முயற்சிக்கின்றோம் எனச் சொல்கின்றீர்களே. நாம் எப்போது உங்களுடன் சேர்ந்திருந்தோம்? ஐரோப்பியரால் கைப்பற்றப் பட்ட எமது பூமி எக்காலத்திலும் எம்மிடம் திருப்பி ஒப்



படைக்கப்படவில்லை. அதனை நாம் இணைப்பு என்ற பெயரில் யாரிடமும் தாரைவார்க்கவும் இல்லை.

ஆக்கிரமிப்புக்கள் வேறுபட்ட அதிகார அமைப்புக்களினால் கைமாறிப் பொறுப்பேற்கப்பட்டு வரும் நிலையே இன்னும் நீடிக்கின்றதே அன்றி எம்பூமியை நாமே நிர்வகிக்கும் நிலை எம்வசம் இன்னும் வரவில்லை.

### விஷ வித்தை வளர்த்தது யார்?

இந்நிலையில் நாம் கோருவது விடுதலையே அன்றி துண்டாடல் அல்ல. இதனை நாம் கோருவது நிச்சயம் குறுகிய மனப்பான்மையான ஓர் செய்கையன்று. இதை நாம் பெறுவதன் மூலம் எமது இலட்சியம் மட்டுமல்ல நிறைவேறுவது சிங்கள் மக்களுக்கும் பெரும் நன்மையைச் செய்தவர்களாவோம். காரணம் அதன்பின் இனப்பிரச்சினையை பூதாகரமாக்கி அரசியல் பிழைப்பு நடத்தல் என்பது சிங்கள மக்கள் மத்தியில் எடுபடாது. இதனால் சிங்கள மக்கள் மொழி தவிர்ந்த ஏனைய விடயங்களில் அடிமைப்படுத்தப்பட்டிருக்கும் நிலையை பூரணமாக உணரவும், தமக்கு உண்டான அரசியல் பொருளாதார சமூகத் தளைகளில் இருந்து தம்மை விடுவித்துக்கொள்ளவும் முன் வருவர்.

எந்த ஒரு தேசிய இனமும் தனது இறைமையை நிலைநிறுத்துவதையும் பறிக்கப்பட்டிருப்பின் அதை மீளப்பெற்றுக் கொள்ள முயற்சிப்பதையும் தேசத் துரோகமோ அன்றி பயங்கரவாதமோ என உலகில் எந்த ஒரு சாசனமும் கூறவில்லை. நமது உரிமைகளை நீங்கள் முதலிலேயே அங்கீகரித்திருப்பின் இந்நிலை இத்தீவில் தோன்ற வாய்ப்பில்லை. அங்கீகரியாமல் விட்டது மட்டுமல்ல, மாறாக, கடந்த முப்பத்தைந்தாண்டுகளாக உங்கள் அரசியல் சோரம் போகும் நிலையை மறைப்பதற்கு, பதவி நாற்காலிகளை தக்க வைத்துக் கொள்வதற்கு அவ்வப்போது அப்பாவிச் சிங்கள மக்கள் மனதில் தமிழ் மக்களுக்கு எதிரான விஷவித்தையே ஊன்றி வளர்த்துள்ளீர்கள். ஆனால் சிங்கள மக்கள் உங்கள் நச்சு வலையில் முற்றாக விழுந்து விடவில்லை என்பதை, உங்களால் உருவாக்கப்பெற்ற இனக் கலவரங்களின் போது தமிழ் மக்களுக்கு தம்மால் முடிந்த பாதுகாப்புகளை வழங்கி காடையர்களிடம்

www.tamilarangam.net

இருந்தும், உங்கள் ஏவல் படைகளினதும் கொடுமைக்கு தமிழினத்தை முற்றாகப் பலியிடாது அனுப்பியதன் மூலம் நிரூபித்து வைத்துள்ளனர்.

**விலங்குகளுக்கு உள்ள உரிமை கூட தமிழனுக்கு தரப்படவில்லை**

வழமையாக ஸ்ரீலங்கா அரசின் எதிர்க்கட்சிகளே தாம் பதவிக்கு வருவதற்காக தமிழ், மக்களின் பிரச்சினையில் ஆளும் அமைப்பு ஏதும் தீர்வு காண முயல்கையில் அதை எதிர்த்து கிளர்வதும், சிங்கள மக்களை தூண்டி விடுவதுமான ஒரு நிலையே இருந்து வந்துள்ளது. முதல் முறையாக ஓர் ஆளும் அமைப்பு நேரடியாய் தமிழ் மக்கள்பால் இனவெறியைத் தூண்டியமை கடந்த ஆறு ஆண்டு கால ஆட்சியின் மிக மோசமான நடவடிக்கை ஸ்ரீலங்காவின் ஆளும் அமைப்புக்கும் தமிழ் மக்களுக்கும் இடையேயான உறவுநிலை எப்போதும் இல்லாதவாறு மிகவும் பழுதுபட்ட ஓர் நிலையை தோற்று வித்தமையின் — இத்தார்மீக பொறுப்பை தற்போதைய ஆளும் அமைப்பே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தமிழ் மக்கள் பிரச்சினையை தீர்ப்போம், தீர்ப்போம் என்றே கடந்த கால் நூற்றாண்டுக்கு மேலாக சில ஸ்ரீலங்கா அதிகார அமைப்புக்கள் சொல்லி வருகின்றன. நாங்கள் உங்கள் தீர்வை ஏற்கின்றோமோ இல்லையோ, நீங்கள் இதுவரையில் கபடமற்ற முறையில், எக்காலத்திலும் தமிழ் மக்கள் பிரச்சினையைத் தீர்க்க உருப்படியான நடவடிக்கைகள் ஏதும் எடுத்தது உண்டா? மாறாக பிரச்சனையை தீர்க்கின்றோம் என்ற கபடப் போர்வையுடன் தமிழ் மக்களின் உரிமைப் போராட்ட உணர்வுகளை மழுங்கடிக்கச் செய்யும் காரியங்களிலேயே காலம் காலமாக ஈடுபட்டீர்கள்.

உங்களிடம் தமிழ் மக்கள் எதை எதிர்பார்த்தார்கள்? பொருளாதாரத்தையோ அன்றி வேலை வாய்ப்பையோ அல்ல. இவைகளை உங்கள் பொருளாதாரக் கொள்கைகள் என்றும் நிறைவேற்றப் போவதுமில்லை என்பது தமிழ் மக்களுக்கு நன்கு தெரியும். இல்லை, இவைகளை எல்லாம் நீங்கள் வழங்க முன் வந்தாலும் கூட இத்தீவில் தமிழர் தொடர்ந்து தமிழராக வாழ்வதற்கு என்ன உத்தரவாதம்



உங்களினால் வழங்க முடியும்? அது ஒன்றும் அல்லாத மீதி எந்த சுபீட்சமும் தமிழ் மக்களைப் பொறுத்தமட்டில் அந்நிய மானவையே.

இத்தீவில் வனவிலங்குகளுக்கேனும் ஓர் வரையறுக்கப் பட்ட பிரதேசம் உண்டு. ஆனால் தமிழன் தமிழனாக வாழ் வதற்கு பாதுகாக்கப்பட்ட வரையறை உள்ள எதுவும் உங்களினால் இதுவரை வழங்கப்படவில்லை. நீங்களாகவே வழங்கப் போவதுமில்லை. இந்நிலைக்கு நாம் வந்து பன்னிரண்டு வருடங்களுக்கு மேலாகின்றன.

விசாரணையின் நடுவே பிரதி சொலிசிட்டர் ஜெனரல் அவர்கள் திரு. யோகச்சந்திரனைப் பார்த்து கேட்டார்; "இந்நீதி மன்றத்தை உமக்குக் கிடைத்த மேடையாகப் பாவிக்கும் நோக்கமா?" என்று. எமக்கு எதற்கு மேடை? அப்படி ஒன்றை உருவாக்கித் தரும்படி நாமாக யாரையும் கேட்கவும் இல்லையே. மாறாக நீங்களே வலிந்து கொண்டு வந்து எம்மை இங்கு நிறுத்தியிருப்பதுமல்லாமல், எம்மீது அபாண்டங்களையும் சுமத்தினீர்கள். எம்மீது பொய்களை புனைந்து சொன்னதும் அல்லாது எம்மையே பொய்யராக்க வும் எத்தனித்தபோது சில உண்மைகளை இங்கு நாம் பேசினோமே அல்லாமல் நாம் மேடை நாடகம் எதுவும் ஆடவில்லை. உண்மைக்கு மேடையோ, அன்றி வெளிச்சமோ போட்டு காட்ட வேண்டியதில்லை. அது மிகவும் மகத்தானது. அது வெளி வருவதை எந்த சக்தியாலும் நிரந்தரமாய் தடுத்துவிட முடியாது.

**எது பயங்கரவாதம்?**

நாம் பயங்கரவாதிகளும் அல்லர். அதன் எந்த உருவையும் ஆதரிப்போரும் அல்லர். மாறாக, அதை நாம் கண்டித்து உள்ளோம். ஆனாலும் பயங்கரவாதம், பயங்கரவாதம் என ஒலமிடும் பெருந்தகையாளர் கட்சிக்கு ஒன்று சொல்லிக் கொள்வேன். உங்களினால் கிளப்பி விடப்பட்ட இனத்துவேச தீயினாலும், ஆயுதக் காடையர்களினாலும் நூற்றுக்கணக்கான தமிழர் உயிர் இழந்தபோதிலும், தமிழ் பெண்கள் கற்பு அவர்கள் குடும்பத்தினர் முன்னிலையிலேயே பறிக்கப்பட்ட போதும், அவர்களின் நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் சொத்துகள் சூறையாடப்பட்ட போதும் அவை உங்கட்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பயங்கரவாதம் எனத் தோன்றவில்லையா? இல்லை, அதற்கு மேற்பட்ட சொற்கள், அதற்கு ஏதேனும் உண்டா என இன்னமும் அகராதியில் தேடிக்கொண்டிருக்கின்றீர்களா?

மாறாக, தமிழ் ஈழத்தில் ஒரு சில பொலிசாரின் உயிர்கள் பறிக்கப்பட்டதும், வங்கி உடமைகள், கொள்ளை போனதுமே தானா உங்களுக்கு பயங்கரவாதமெனத் தோன்றுகிறது. அப்படியாயின் ஸ்ரீ லங்காவின் பொலிசார் மட்டுமே உங்கள் பார்வையில் அப்பாவிகளாய் தோற்றம் தருகின்றார்களா? பச்சைக் கொலையாக 1977—ம் ஆண்டில் மட்டும் உயிர் இழந்தவர்களே 400க்கும் மேற்பட்ட தமிழர்கள். அவர்களின் குருதி பாய்ந்து ஓடியதால் இத்தீவின் மேல் கவிழ்ந்திருந்த வானமே செக்கல் மயமானது. அவை எல்லாம் உங்களுக்கு பயங்கரவாதம் என்று தோன்றவில்லையா? தமிழ் மக்களைக் கொலை செய்தவர்கள் மட்டுமே, அப்பாவிகளாகவும் குற்றம் செய்யாதவர்களாகவும் உங்களுடைய கண்களுக்கு தோற்றம் தருகின்றார்களா? தமிழ் மக்களின் உயிர் உடைமை என வரும்போது உங்கள் சிந்தையின் மெல்லிய உணர்வுகள் அறவே மரத்து விடுகின்றனவா? அல்லது அப்படியான ஒரு உணர்வு உங்கள் வாழ்வில் புரியாத ஒரு மொழியா?

**சிங்களருக்கு ஒரு கேள்வி**

**நாம் வன்முறைமீது காதல் கொண்டவர்களோ, அன்றி அது மாதிரியான நோய்களால் பாதிப்புற்ற மனநோயாளிகளோ அல்லர். மாறாக விடுதலையை முன் வைத்துப் போராடும் ஓர் ஸ்தாபனத்தில் அங்கம் வகிக்கும் நேர்மையான போராளிகளே நாங்கள்.**

சிங்கள மக்களுக்கு ஒன்று சொல்லிக் கொள்வேன். எமது பூமியில் மட்டுமல்லாது உங்கள் நாட்டின் பல பாகங்களிலும் மிக அண்மைக்காலம் வரை தமிழ் மக்கள் மீது பல தடவைகள் உங்கள் நாட்டு அதிகார அமைப்பினால் கட்டவிழ்த்து விடப்பட்ட பயங்கர வாதத்தை சரி என நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா? அன்றியும் இவை மட்டுமல்லாது, நம்மை நாம் அல்லாதவராக்கும் முயற்சியிலும் பல வழிகளிலும் ஈடுபட்டு வரும் உங்கள் அரசின் நாகரீகமற்ற நடவடிக்கைகளின் பாதிப்பில் இருந்து எம்மக்களை மீட்க நாம் முன்நின்றமையைத்தான் தவறு என்று சொல்வீர்களா?



அப்படியான ஓர் உயர்ந்த லட்சியத்தை முன்வைத்துப் போராடிய எம்மீது பயங்கரவாதத் திரையை போர்த்தி உங்கள் நாட்டுச் சட்டங்களிலும் பயங்கரவாதத்தைப் புகுத்தி புதுப் பெருமையைத் தேடிக் கொண்ட உங்கள் அதிகார அமைப்பு எம்மீது விசாரணை என்ற பெயரில் நடத்தும் கண்துடைப்புகளையும் சரி என ஏற்றுக் கொள்கின்றீர்களா? அல்லது பாதிக்கப்படுபவன் தமிழன் தானே என்ற பொறுப்பற்ற உணர்வா? அப்படியாயின் தற்போதைக்கு உங்கள் மீது எம்மால் அனுதாபம் கொள்ள மட்டுமே முடியும்.

நாம் விடுதலை பெறுவது நிதர்சனமான உண்மை. அதன் பின்னர் உங்கள் நாட்டின் சட்டப் புத்தகங்களில் நிரந்தர இடம் பெற்றுவிட்ட எச்சட்டங்களும் எம்மை அணுகா, அப்படியாயின் இச்சட்டங்களையும் பயங்கரவாதத்தையும் எதிர்காலத்தில் நீங்களே சுவீகாரம் எடுப்பீர்கள் என்ற கையறு நிலையை இப்போதே எய்தி விட்டீர்களா?

**அநீதிக்கு அங்கீகாரம்?**

அன்றி, எமக்கு இழைக்கப்படும் அநீதியை நிறுத்தி எம் இறைமையை அங்கீகரிக்கும்படியும், அதன் முதல் கட்டமாய் — பயங்கரவாதத்தை முற்றாக ஒழிக்கும் ஓர் அம்சமாய், — அதன் மொத்த உரித்தாளரான சிறீலங்காவின் ஆயுதப்படைகளை எம் பூமியில் இருந்து மீளப்பெறும்படியும் உங்கள் அரசை வற்புறுத்துவதன் மூலம் உங்கள் மனோ விசாலத்தை உலகிற்கு உணர்த்த போகின்றீர்களா? தீர்மானிக்கும் பொறுப்பை உங்களிடமே விடுகின்றோம்.

நாடு வேறானாலும் கூட, ஒரே தீவின் பிரஜைகள் என்ற வகையில் உங்கள் புரிந்துணர்வை பெற வேண்டும் என்ற நல் நோக்குடனேயே இவ்வழக்கின் விசாரணைக்கு நாம் சமூகமளித்தது மட்டுமல்லாது. இன்று எமது நிலையையும் உங்கட்கு தெளிவாய் காட்டினோம். இதனால் ஏற்படும் புரிந்துணர்வின் மூலம் எதிர்காலத்தில் எம்பொருட்டு நீங்கள் குரல் கொடுப்பீர்களே ஆயின், மிக்க மன நிறைவை எய்தியவர்களாவோம்.

இல்லாவிடினும்கூட, தற்போதைய சமூக, பொருளாதார நடவடிக்கைகளே தொடர்ந்து, அதன் சுமை தாங்காது என்று



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உணர்ந்து, அதன் தளைகளை உடைத்து உங்களை விடுவிக்க நீங்கள் நடத்தும் போராட்டத்திற்கு நாம் மிக உறுதுணையாக இருப்போம் என்பதை மனப்பூர்வமாய் உங்கட்கு தெரிவிக் கிறோம்.

தமிழ் ஈழம் அமைப்பது ஒன்றுதான் எமது முற்றான பணி என நாம் சொல்லிவிடமாட்டோம். ஈழத்திய தமிழர், தமிழராய் தொடர்ந்து வாழ வேண்டுமாயின் தமிழ் ஈழம் அமைப்பது ஒன்று தான் நம் முன் உள்ள ஒரே வழி என்பதனை சிறீலங்கா அரசு பல வழிகளிலும் எம்மை உந்தியதின் மூலமே அவ்வழியில் மிக முனைப்பாய் உள்ளோம்.

எமது நோக்கு மிக விசாலமானது. ஆப்பிரிக்க கண்டம் என்றால் என்ன, லத்தின் அமெரிக்க நாடு என்றால் என்ன எங்கெங்கு அடக்கி ஒடுக்கப்பட்ட மக்கள் வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் அவர்களின் விடுதலைக்காகப் போராடும் நோக்கத்தையும் உள்ளடக்கியது. அப்படி இருக்கையில் எமது சக தேசத்தவரான மக்களின், குறிப்பாக சிங்கள மக்களின் நலன் அதற்குள் எப்படி அடங்காது போகும்.

### கூட்டுச் சதி

இரு அயல் தேசங்கள் ஒற்றுமையாக இருக்கக்கூடாது என்ற நிர்ப்பந்தம் இல்லை. மாறுபட்ட கொள்கை உடைய எத்தனையோ நாடுகள் பொருளாதாரம். பாதுகாப்பு என்ற விடயங்களுக்காக சில பொதுக்கோட்பாடுகளுக்கு அமைய ஒரு அமைப்பை உருவாக்கி செயல்பட்டு வரவில்லையா? அதற்காக அந்நாடுகள் தமது இறைமையை விட்டுக் கொடுத்து விட்டன என நாம் சொல்ல முடியுமா? அப்படி இருக்கையில் எம்நோக்கு இத்தீவின் நன்மையை மட்டும் கொண்டதல்ல இவ்வுலகின் வல்லாதிக்கம் கொண்ட சில சக்திகள், தெற்காசியப் பிராந்தியத்தில், குறிப்பாய் மூன்றாம் மண்டல நாடுகளை பொருளாதார ரீதியில் தலையெடுக்க விடாது செய்துவரும் கூட்டுச் சதியை முறியடிக்கும் விதத்தில், இந்த உபகண்டத்தின் தன்னுறுதிக்குமுள்ள முற்போக்குக் குடியரசுகள், இவ்வுபகண்ட நன்மை கருதி அதற்கு ஒரு பொது அமைப்பையோ அல்லது எந்தக்குடியரசினதும் தன்னுறுதிக்கத்திற்கு பங்கம் வரா வகையில் பல குடியரசுகள் கொண்ட ஒரு ஒன்றியத்தை உருவாக்கும் பட்சத்தில் உபகண்ட நன்மை கருதி, தமிழ் ஈழம்



நிச்சயமாக தன் பங்களிப்பை வழங்கும்——

இறுதியாக ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஸ்ரீலங்கா அரசின் எந்த அமைப்பிலும் இருந்து நாம் நீதியை எதிர்பார்க்கவில்லை. இம்மன்றமும் அதற்கு விதிவிலக்கல்ல. எமக்குத் தெரியும் உங்களது சங்கடமான நிலைமை. சுயேச்சையான நிர்வாகம் அருகிவரும், உங்கள் அரசியல் அமைப்பில் — நீதி நிர்வாகத்தில் — பணிபுரிபவர்கள் அரசைத் திருப்தி பண்ணியே ஆகவேண்டும் என்ற நிர்ப்பந்த நிலை ஏற்பட்டிருப்பது இயல்பே.

அதையே தான் இம்மன்றமும் இவ்வழக்கின் ஆரம்பத்தி லிருந்து எம்மீது நடந்து வரும் முறைகளின் மூலமும் நிரூபித்துள்ளது. அதே போல் ஸ்ரீலங்காவின் சட்டமா அதிபர் திணைக்களத்தின் யோக்கியதாம்சம் தமிழ் மக்கள் பால் எப்பாற்பட்டது என்பதும் தமிழ் மக்கள் நன்கறிந்த விடயம்.

### சீருடை அணிந்த கொலைஞர்கள்

1967—ம் ஆண்டில் தமிழ் ஈழத்தின் வல்வை நகரில் திரு. சிவஞான சுந்தரத்திலிருந்து '82—ஆம் ஆண்டில் தமிழ் ஈழத்தின் அச்சுவேலியில் நவரெத்தினம் என்பவர் வரை, ஸ்ரீலங்காவின் பொலிஸ் - ஆயுதப் படையினர் சுட்டுக் கொன்ற விடயங்கள் கொலை என உங்கள் நீதிமன்றங்களே ஊர்ஜிதம் செய்த பின்னர் கூட, மேல் நடவடிக்கை எடுக்கவிடாது தடுத்ததன் மூலம், சீருடை தரித்த கொலைகாரர்களை எந்தவித பயமுமின்றி எமது பூமியில் நாமும் நடமாட அனுமதி அளிப்பது இங்கு நீதியின் பெயரில் குரல் எழுப்பும் அடிப்படையிலா நடக்கிறது?

இந்நிலையில், தமிழ் இன விடுதலை இயக்கங்களை நசித்தே ஆவேன் என கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும் ஓர் அரசின் மன்றத்தில் இனியும் மௌனக்கெடுவதற்கு ஏதுமில்லை. எமது இயக்கத்தின் மீது இம்மன்றத்தில் நடத்தி முடிக்கப்பட இருக்கும் இரண்டாவது வழக்கு இது. இனி எத்தனை வழக்குகள் எம்மீது உங்களால் சோடிக்கப்பட்ட போதும் நாமும் விசாரணையில் பங்கெடுத்துக் கொண்டது எனும் நிலை இவ்வழக்குடன் பூர்த்தி யாகின்றது. உங்களது நோக்கம் எம்மை தண்டிக்க வேண்டும் என்பதே. அதை இனி எமது எந்தவித இடையூறும் இல்லாது விருப்பம்போல் மிகச் சுலபமாய்ச் செய்யுங்கள். தற்போதைக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உங்களுக்கு நாம் செய்யும் உதவி இதுவே.

தற்போதைக்கு இவ்வழக்கின் மூலம் உண்மை நிலையை உலகிற்கும், குறிப்பாய் இத்தீவின் மக்கள் யாவர்க்கும் உணர்த்தி விட்ட மகிழ்வே எமக்கு மேலோங்கி உள்ளது. மக்களின் மனத்தீர்ப்பே எமக்கு முக்கியமானது. அவர்கள் தீர்ப்பு நிச்சயமாய் எமக்கே சாதகமாய் அமையும் என்ற நிறைவை எய்தியுள்ளோம். இனி எம்மீது எத்தனை வழக்குகள்தான் சோடிக்கப்பட்டாலும், எத்தனை அவதூறுகள் வாரி இறைக்கப்பட்டாலும் எமக்கு அதுபற்றிக் கவலை இல்லை. உங்களது அந்த நடவடிக்கைகள் மூலம் வெற்றி பெறப் போவதும் நாமே. உங்கள் தீர்ப்பின் பாதிப்புகள் எம்வரை அந்நியமானவையே.

எனவே நாம் நமது கடமையை முடிந்தவரை செய்த மனநிறைவுடன் எதிர்காலத்தை சிறையில் களிக்கவோ, வேண்டுமாயின் மரணத்தைக் கூட தழுவவோ நாம் தயங்கவில்லை.

ஓர் இனத்தின் விடுதலை வரலாற்றில் இவை எல்லாம் மிகச் சர்வ சாதாரண சம்பவங்களே! இதை நாம் தெரிந்தே ஈடுபட்டோம். எமக்கு ஏமாற்றம் என்பது எதுவுமே இல்லை. எதை எய்கின்றோமோ அதுவேதான் நம்மிடம் திரும்பிவரும், எதை விதைக்கின்றோமோ அதையேதான் அறுவடை செய்ய வேண்டும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டவன் நான். நாம் விதைத்தவை விஷ விதைகளுமல்ல, எய்தவை நச்சு பாணங்களுமல்ல. அதனால்தான் இந்த நிமிடத்திலும் நான் மிகத் தெளிவாக மனநிறைவுடன் நிற்கின்றேன்.

வாழ்க தமிழ்!
வளர்க தமிழ் ஈழம்!
அகன்று போகட்டும் வறுமையும்
அணுவாயுதப் பயமுறுத்தலும்!
ஒழிக பசியும் பிணியும்!
ஓங்கட்டும் மனித நேயம்!



**தளபதி குட்டிமணி அவர்கள்; 13.08.82 அன்று தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டபோது தூக்கு மர நிழலிலும் அஞ்சாது நின்று நிகழ்த்திய, விடுதலை வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய வீர உரை.**

"எமது பாரம்பரியப் பிரதேசங்களிலிருந்து ஸ்ரீலங்கா இராணுவம் உடனடியாக வெளியேற வேண்டும். இல்லையேல் தமிழீழ விடுதலை இயக்கத்தினராகியநாம் அவர்களைப் பலாத்காரமாக வெளியேற்றுவோம்."

"நான் மட்டுமல்ல, என்னைப் போன்ற இன்னும் பல தமிழ் இளைஞர்கள் இந்த நீதி மன்றங்களுக்கு முன்னால் கொண்டு வரப்பட இருக்கிறார்கள். அந்த அப்பாவித் தமிழ் இளைஞர்களுக்கும் பயங்கரவாதிகள் என பட்டம் சூட்டப்பட்டு, இந்த அரசின் நீதி மன்றங்களினால் மரண தண்டனை விதிக்கப்படும்."

"நீதிபதி எனக்கு அளித்த தீர்ப்பின் மூலம் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஒரு உத்வேகத்தையும் உற்சாகத்தையும் ஏற்படுத்தியுள்ளார்."

"என்னைத் தூக்கிலிடுவதன் மூலம் பல்லாயிரக்கணக்கான குட்டிமணிகள் உருவாகுவார்கள். அவர்கள் தமிழ் ஈழத்தின் இறைமையை மீட்டெடுக்கக்கூடிய தீரம்மிக்க வீரர்களாக இருப்பார்கள்."

என் தமிழ் மண்ணில் தமிழ் ஈழத்தில் என்னைத் தூக்கிலிடுங்கள். என் கண்களைப் பார்வையற்ற தமிழ் மகன் ஒருவருக்கு வழங்குங்கள். அதன் மூலம் மிக விரைவில் மலரப்போகும் தமிழீழத்தைக் கண்டு களிப்பேன். எனது உடலின் ஏனைய பயன்படக்கூடிய உறுப்புக்களை, அவை தேவைப்படுவோருக்கு வழங்குங்கள்.

"என் உடலை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு வழங்குங்கள்."

"இப்போது எனக்குள்ள கவலை எல்லாம் ஒன்றே ஒன்றுதான். எனது மக்களிற்காக, எனது இனத்திற்காக அளிப்பதற்கு என்னிடம் ஒரே ஒரு உயிர் மட்டுமே உண்டு.


வாழ்க தமிழ்! வளர்க தமிழ் ஈழம்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஸ்ரீலங்கா போலிஸ் கான்ஸ்டபிள் சிவநேசன் கொலை வழக்கில், தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டபோது, முன்னணிப் போராட்ட வீரர் ஜெகனின் வீர முழக்கம்.



முன்னணிப் போராளி
தோழர் ஜெகன்

"என்னைத்தான் நீதிபதி தூக்கிலிட முடியும். மலரப் போகும் தமிழீழத்தை எவராலும் தூக்கிலிட முடியாது."

"சுதந்திரம் எனது பிறப்புரிமை அது எனக்கு இம்மியளவும் கிடைக்கவில்லை."

"இந்த மரண தண்டனைகள் தமிழ் ஈழத்திற்கான போராட்டத்தை வலிவு படுத்தும் உரமாகவே இருக்கும்.

"நான் தூக்கில் தொங்குவதற்குத் தயார். இந்தத் தண்டனையை மிகுந்த மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்கிறேன்.

"எனது கண்களைப் பார்வையற்ற தமிழ் மகனுக்குப் பார்வையைப் பெற்றுக் கொடுப்பதற்காக ஒப்படையுங்கள்.

"இப்போது தமிழ் ஈழத்திற்கென என்னால் செய்யக் கூடியது, என் உயிரைக் கொடுப்பது மாத்திரமே.

"எவரது கருணையும் எனக்குத் தேவையில்லை.

"என்னை எனது தமிழ் ஈழத்தில் தூக்கிலிடுங்கள்.

"எனது உடலை யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு அனுப்புங்கள்.

"வாழ்க தமிழ்! வளர்க தமிழ் ஈழம்!"



## வழக்கறிஞர் சத்தியேந்திராவின் வீர வணக்கம்

(எமது இயக்கத் தோழர்களுக்கு எதிராக சிறீலங்கா அரசினால் சோடிக்கப்பட்ட வழக்கில் வரலாற்று முக்கியத்துவம் மிக்க வாதத்தினை நிகழ்த்திய வழக்கறிஞர் சத்தியேந்திராவின் தொகுப்புரையின் ஒரு பகுதி இது).

"ஒரு கொள்கை பலம் பெற்று வருகின்றது. அக் கொள்கைக்கு ஆதரவாளர்கள் பெருகுகின்றார்கள். அக் கொள்கையைப் பிரச்சாரம் செய்வோர் பெருகுகின்றார்கள். தொண்டர்கள் திரளுகின்றார்கள். தாம் ஏற்றுக் கொண்ட கொள்கையை செயல்படுத்த முனையும் போது, அதனை எதிர்ப்பவர்களுடன் மோதல் ஏற்படுகின்றது. இதனால் தியாகிகள் உருவாக்கப்படுகின்றார்கள். இவர்கள் செய்யும் தியாகம் அவர்கள் ஏற்றுக் கொண்ட கொள்கைக்கு உரமாக அமைகின்றது. தீவிரவாதிகளின் கொள்கை வெற்றி பெறும்வரை அந்நாட்டிற்கோ அந்நாட்டை ஆளும் அரசிற்கோ சமாதானமோ, ஆறுதலோ ஏற்படமாட்டாது. இதுதான் வரலாறு கூறும் பாடம். இதைப் படிக்க மறுப்பவர்கள், அதை அனுபவித்துப் பார்த்துக் கொள்ளட்டும்.

இவ்வழக்கின் ஆரம்பத்திலேயே சாட்சிக்கூண்டில் ஏறிய எதிரிகள் தாம் தமிழர்கள் என்பதையும், தமிழ் இன சமுதாயத்தின் விடுதலைக்காக தமது உயிரை அர்ப்பணிக்கவும் துணிந்தவர்கள் என்று கூறியுள்ளனர். "சுதந்திரம் கோரும் மக்களை அரசின் மிருக பலத்தினால் அடக்கிவிட முடியாது. எத்தனை ஆயுதம் தாங்கிய பொலிசாரையும் ஆயுதப்படையினரையும் குவித்தாலும் எத்தனை துப்பாக்கிகளை வைத்திருந்தாலும் விடுதலை வேட்கையை நசுக்கிவிடவோ, ஒடுக்கி விடவோ முடியாது. விடுதலைப் போராளிகளை எதிர்த்துப் போராடும் வீரர்களையும், துவக்குகளையும், சிறைக்கூடங்களையும் விட விடுதலை வேட்கையும் விடுதலை அபிலாசைகளும் பலம் மிக்கவை என்கின்ற கருத்தை அரவிந்தகோஷ் வெளியிட்டிருக்கின்றார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நான் இறுதியாக ஒரே ஒரு விடயத்தை மட்டும் கூற விரும்புகின்றேன். நீதிமன்றப் பதிவேட்டில் பதியப்படுவதற்காக தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தைச் சேர்ந்த எனது கட்சிக்காரர்களின் சார்பில் நான் வெளிப்படையாகக் கூறுவது இதுதான். தமது மக்களின் மீட்சிக்காக எந்த மனிதனும் அர்ப்பணிக்க வேண்டிய மிக உன்னதமான பொருளான தமது உயிரையே அர்ப்பணிக்கத் தயாராக - என்னுடைய மக்கள் இடையே இருந்து - என்னுடைய இனத்தில் இருந்து - முன் வந்திருக்கும் என்னுடைய கட்சிக்காரர்களின் முன்னால் என்னை நான் மிகவும் சிறியவனாக — அற்ப மனிதனாகவே கருதிக் கொள்கின்றேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*MAL.ARCHI*
No·143,Wakefield street
EastHam, London.E6

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்